# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 007/நகராட்சி/2020**

**நாள் : 14/01/2020**

**திருமதி C. சின்னத்தாய்,**
**ஆம்பூர்.** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையாளர்,**
**ஆம்பூர் நகராட்சி,**
**ஆம்பூர்.** – **எதிர் மனுதாரர்**

வேலூர் மாவட்டம், ஆம்பூர், கட்டைமேடு முதல் தெரு, 7/C–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி C. சின்னத்தாய் அவர்களின் 05.01.2020 நாளிட்ட மனு, இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 007/2020 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், ஆம்பூர், கட்டைமேடு முதல் தெரு, 7/C–கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி C. சின்னத்தாய் என்பவர், தான் ஆம்பூர் நகராட்சியில் துப்புரவுப் பணியாளராகப் பணியாற்றி வயது முதிர்வின் காரணமாக 30.06.2019 அன்று பணி ஓய்வு பெற்றதாகவும், தனது பணி ஓய்விற்கு பின் 22.02.2016 நாளிட்ட நிதித் துறை அரசாணை எண்.59–இன் படி தனக்கு வழங்கப்படவேண்டிய ஒய்வூதிய பங்களிப்புத் தொகை மற்றும் நிர்வாகப் பங்குத் தொகை வட்டியுடன் கணக்கிட்டு வழங்கக் கோரி 08.07.2019 நாளிட்ட கடிதத்தில் ஆம்பூர் நகராட்சி ஆணையருக்கு மனுச் செய்தும் இதுநாள் வரையும் தனக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். பணி ஓய்விற்குப் பின் தான் மிகவும் கஷ்டப்படுவதாகவும் பலமுறை நேரில் கேட்டும், தமிழ்நாட்டில் யாருக்கும் ஒய்வூதிய பங்களிப்புத் தொகை வழங்கப்படவில்லையென்று தெரிவித்ததாகவும் முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் 01.11.2006 முதல் காலமுறை ஊதிய விகிதத்தில் துப்புரவுப் பணியாளராக நியமனம் செய்யப்பட்டு வயது முதிர்வின் காரணமாக 30.06.2019 அன்று பணி ஓய்வு பெற்றுள்ளார். மனுதாரர் தனது 08.07.2019 நாளிட்ட கடிதத்தில் பிடித்தம் செய்யப்பட்ட ஒய்வூதியப் பங்களிப்புத் தொகை மற்றும் நிர்வாகப் பங்குத் தொகையினை வழங்கக் கோரி நகராட்சி

ஆணையாளருக்கு மனுச் செய்துள்ளார். எனினும், பத்தி 1–இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதித் துறை அரசாணையின் படி உரிய படிவத்தில் விண்ணப்பித்துள்ளாரா என்ற விவரம் தெரியவில்லை. எனவே, உரிய படிவத்தில் விண்ணப்பித்துள்ளதை உறுதி செய்து கொள்ளுமாறு முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது. பணி ஓய்வு பெற்ற திருமதி C. சின்னத்தாய் என்பவரிடமிருந்து உரிய படிவத்தில் விண்ணப்பம் பெறப்பட்டிருப்பின், ஓய்வூதியப் பங்களிப்பு வழங்குவதற்கான கருத்துருவினை சென்னை, கருவூலம் மற்றும் கணக்குத்துறை இயக்குநருக்கு அனுப்பி அத்தொகையினை முறையீட்டு மனுதாரருக்கு நடைமுறை விதிகளின்படி பெற்றுத் தருவதற்கான நடவடிக்கையினை உடன் மேற்கொள்வதற்கு ஆம்பூர் நகராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

**2020– ஆம் ஆண்டு, ஜனவரி** திங்கள், **14–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர் 20.1.20

20.01.2020

20/1/2020

பெறுநர்

1. **திருமதி C. சின்னத்தாய்,**
   **எண்.7/C, கட்டை மேடு, முதல்தெரு,**
   **ஆம்பூர்,**
   **வேலூர் மாவட்டம்**

2. **நகராட்சி ஆணையாளர்,**
   **ஆம்பூர் நகராட்சி,**
   **ஆம்பூர், வேலூர் மாவட்டம்.**

3. **இயக்குநர்,**
   **கருவூலம் மற்றும் கணக்குத்துறை,**
   **எண்.571, அண்ணாசாலை,**
   **நந்தனம், சென்னை – 600 035.**

4. **நகராட்சி நிர்வாக ஆணையர்,**
   **நகராட்சி நிர்வாக ஆணையரகம்,**
   **சாந்தோம் நெடுஞ்சாலை,**
   **எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,**
   **M.R.C. நகர், இராஜா அண்ணாமலை புரம்,**
   **சென்னை – 600 028.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி